டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜு வ ல் ல ர் ஸ்

agridoctor.in | 29.04.2026 புதன்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 258 - Madurai | Online Edition

# வெப்ப அலைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான மேம்பட்ட நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும்

## தேசிய மனித உரிமைகள் ஆணையம்

புது தில்லி, ஏப்.28

நாட்டில் வெப்ப அலைகளால் பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதுகாப்பதற்கு தேவையான மேம்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நிவாரண மதிப்பீடுகளை 21 மாநில அரசுகள் மற்றும் தேசிய தலைநகர் தில்லி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய மனித உரிமைகள் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஆந்திரப்பிரதேசம், அசாம், பீகார், சத்தீஸ்கர், குஜராத், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், ஜார்க்கண்ட், கர்நாடகா, கேரளம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், தமிழ்நாடு, தெலங்கானா, திரிபுரா, உத்தரப்பிரதேசம் மற்றும் மேற்குவங்கம் ஆகிய மாநிலங்கள் இதில் அடங்கும்.

வெப்ப அலைகளின் தீவிரம், காலஅளவு, அடிக்கடி உயர்ந்து வரும் அதன் தாக்கம், விளிம்பு நிலை மக்கள், பொருளா தாரத்தில் பின்தங்கியுள்ள பிரிவினர், திறந்தவெளியில் பணிபுரியும் தொழிலாளர்கள், தங்குமிட வசதியில்லாத வீடற்ற மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக மனித உரிமைகள் ஆணையம் கண்டறிந்துள்ளது.

கடும் வெப்பம் காரணமாக மூத்த குடிமக்கள், சிறார்கள், குழந்தைகள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் ஆகியோருக்கு உடல்நலக்குறைவு ஏற்படுகிறது. கூடுதலாக, வெப்ப அலை களின் தாக்கம் காரணமாக வாழ்வாதார இழப்புகளுடன், தீ விபத்து போன்ற அபாயங்களும் அதிகரித்துள்ளது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு, தேசிய மனித உரிமைகள் ஆணையம் அனைத்து மாநிலங்கள் மற்றும் தில்லி யூனியன் பிரதேச தலைமைச் செயலாளர்களுக்கு கடிதம் எழுதியுள்ளது. இக்கடிதத்தில் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத் தப்பட்டுள்ளது. 2019-23-ம் ஆண்டுகளுக்கு இடையே சன்ஸ்ட்ரோக் அல்லது கடும் வெப்பம் காரணமாக 3,712 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய குற்றவியல் ஆவண காப்பகம் தெரிவித்துள்ளதை அந்த ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடும் வெப்பம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை குறைப் பதற்கும், இதனால் உயிரிழப்பு ஏற்படுவதை தடுப்பதற்கும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் வெளியிடப் பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் அல்லது ஏற்கனவே நடை முறையில் உள்ள நிலையான செயல்பாட்டு முறையின்படி, நிவாரண நடவடிக்கைகளை எவ்வித இடையூறுமின்றி உடனடி யாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்த அந்த ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள மாவட்ட நிர்வாகத்திடமிருந்து வெப்ப அலைகளால் ஏற்படும் தாக்கத்தை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒட்டு மொத்த நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை தாக்கல் செய்யுமாறும் அந்த ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கேரளா மாநிலத்தில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அரியலூர் மாவட்ட விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி



அரியலூர், ஏப்.28

அரியலூர் மாவட்டத்தின் விரிவாக்க அலுவலர்களுக்கான ஆத்மா திட்டத்தின் மூலம் மாநில பயிற்சிக்காக கேரளா மாநிலத்தில் உள்ள வெள்ளையானி வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சென்றனர்.

அரியலூர் மாவட்டத்தில் ஆத்மா திட்டத்தின் மூலம் மாநில அளவிலான பயிற்சிக்கு கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே உள்ள வெள்ளையானி வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு வேளாண்மை தொழில்நுட்பங்களை கல்லூரியின் பேராசிரியர்கள் எடுத்துரைத்தார்கள். கல்லூரியில் உள்ள பண்ணைகளுக்கு சென்று தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார்கள். இந்த பயிற்சியில் அரியலூர் மாவட்ட வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கான வேளாண்மை வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி, தோட்டக்கலை உதவி இயக்குனர் கண்ணன் மற்றும் கலைமணி, வேளாண்மை அலுவலர் மகேந்திரவர்மன், கலைச்செல்வி மற்றும் சுகந்தி, துணை வேளாண்மை அலுவலர் ராஜதுரை, வேளாண்மை உதவி அலுவலர் ராம்குமார், விற்பனை அலுவலர் கருணாகரன், ஆத்மா திட்டத்தின் வட்டார மேலாளர் செந்தில் ஆகியோர் சென்றனர். இந்த பயிற்சியானது ஐந்து நாட்கள் கொண்டதாகும். இதில் கேரள மாநிலத்தில் நடைபெற்று வரும் பல்வேறுப்பட்ட வேளாண்மை தொழில் நுட்பங்களை கல்லூரி பேராசிரியர்கள் எடுத்துரைத்தவர்கள்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்–ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**நாவல் பழ ஜுஸ்**



**தேவைப்படும் பொருட்கள்**

நாவல் பழம் ரெண்டு கப்

தண்ணீர் மூன்று கப்

தேன் 3 தேக்கரண்டி

**செய்முறை**

நாவல் பழங்களை நன்றாக கழுவி மேற்கூரிய உள்ள மூன்று கப் தண்ணீரில் பழங்களை போட்டு நன்றாக பிசைய வேண்டும். கொட்டைகளை அப்புறப்படுத்தி விடவும். அத்துடன் தேன் கலந்து பருக வேண்டும். அல்லது தேவைக்கேற்ப மிளகுத்தூள், இந்து உப்பும் சேர்ந்து பருகலாம்.

**பயன்கள்**

வாய்ப்புண், வாய் துர்நாற்றம், பல் ஈறுகளில் ரத்தம் சீழ் வடிதல், மூலம் இவற்றிற்கு மிகவும் நல்லது. சர்க்கரை வியாதியை குணப்படுத்தும். அதிக மாதவிடாய் தொல்லைகளால் அவதி உறும் பெண்களுக்கு மிகவும் நல்லது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

## பீட்ரூட் ஜாம்

### தேவைப்படும் பொருள்கள்

பீட்ரூட் கால் கிலோ

கொட்டை நீக்கிய பேரிச்சம்பழம் கால் கிலோ.

தேன் 25 கிராம்.



### செய்முறை

பேரீச்சம் பழத்தை அரை மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். பீட்ரூட் தோலை நீக்கி பூ போல் துருவி தேவைக் கேற்ப கொஞ்சம் தண்ணீர் சேர்த்து தயாரித்து தொடர்ந்து பேரிச்சம் பழம், பீட்ரூட் இவைகளை ஒன்றாக மிக்சியில் இட்டு நன்கு அரைத்து அப்படியே ஒரு பாத்திரத்தில் எடுத்து அதனுடன் தேன் சேர்த்து கலக்கி வைக்கவும். இந்த இனிப்பு காணாது என்றால் தேவைக்கு ஏற்ப சிறிது நாட்டு வெல்லம் சேர்த்து பயன்படுத்தலாம்.

### பயன்கள்

ரத்த சோகையை போக்கும்,

நரம்பு தளர்ச்சியை போக்கி நல்ல

சுறுசுறுப்பை தருகிறது.

கிழங்கு வகைகளில் பீட்ரூட் கிழங்கு மிகவும் நல்லது செய்-



# விதைப்பரிசோதனை மற்றும் விதைப்பரிசோதனை நிலையத்தின் முக்கியத்துவம்

நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்ய விதைப்பரிசோதனை நிலையம், தோட்டக்கலை இணை இயக்குநர் வளாகத்தின் தரை தளத்தில், ரோஸ் கார்டன், உதகையில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையத்தில் கடந்த 2025-26 ஆம் நிதியாண்டில் 1013 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இதில் 32 விதை மாதிரிகள் முளைப்புத்திறன் குறைவு காரணமாக தரமற்றதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த 32 தரமற்ற விதை குவியல்களும் விதை ஆய்வாளர் மூலம் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்கப்படாமல் தடுக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. தாங்கள் இருப்பு வைத்துள்ள விதைகளை பரிசோதனை செய்ய விரும்பும் விவசாயிகள் மற்றும் விதை விநியோகஸ்தர்கள் ஒரு விதை மாதிரிக்கு ரூ. 80/- மட்டுமே பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளை கொடுத்து, விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

விதைப்பரிசோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பிரதான காய்கறிகளுக்கான விதை மாதிரியின் குறைந்தபட்ச அளவு பின்வருமாறு : கேரட், காலிப்ளவர் மற்றும் முட்டைகோஸ் 10 கிராம், பீட்ரூட் மற்றும் முள்ளங்கி 50 கிராம், பீன்ஸ் 450 கிராம், பட்டாணி 250 கிராம், பாலக்கீரை 25 கிராம், ப்ரொக்கோலி, நூல்கோல் மற்றும் டர்நீப் 10 கிராம் ஆகும்.

இவ்வாறு பயிருக்கேற்ப குறைந்தபட்ச விதை மாதிரியை உதகை, விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதைப்பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் தரமற்ற விதையினால் ஏற்படும் தேவையற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ளலாம் என எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.

# தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகளின் உரிமைகள் மற்றும் பயிர்வகை பாதுகாப்பை பற்றிய கருத்தரங்கு

திருச்சி, ஏப்.28

தேசிய வாழை ஆராய்ச்சி மையம்,வாழை மரபணு வங்கி திட்டத்தை தொடங்குவதற்கும், அறிவுசார் சொத்து உரிமைகள் (IP), தாவர இனங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் உரிமைகள்





சட்டம் (PPV&FRA) குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், பன்முகத்தன்மை கண்காட்சியுடன் இணைந்த விவசாயிகள் சந்திப்பை நடத்தியது. இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், வாழை இனங்களின் மரபணு வளங்களை பாதுகாக்கும் வகையில் வாழை மரபணு வங்கியில் அவற்றை பாதுகாத்து, அவை அழிந்து போகாமல் காப்பது ஆகும். மேலும், PPV&FRA சட்டத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு விளக்குவது இதன் நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சியின் போது, இந்தியஅரசு, புதுதில்லி, PPV&FRA சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாழை இனங்களின் பராமரிப்பிற்கான "வாழை மரபணு வங்கி" என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டது. குறிப்பிடத்தக்க வகையில், விவாயிகளின் வாழை இரகங்கள் பாதுகாப்பதற்கு முதன் முறையாக வாழை மரபணு வங்கி நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம், எதிர்காலத்தில் மேலும் பல வாழை மரபணு வங்கிகள் உருவாக்கப்பட்டு, வாழை மரபணு வளங்களின் பாதுகாப்பு வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் Dr. T.மொஹபாத்ரா, தலைவர், PPV & FRA, Dr. D.K.அகர்வால், பதிவாளர் பொது, PPV&FRA மற்றும் Dr.V. B.பட்டேல், உதவி பொது இயக்குநர், ICAR (KAB-II) ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாழைக்கான வாழை மரபணு வங்கியை Dr. T. மொஹபாத்ரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தொடங்கி வைத்தார். இதில் மொத்தம் 19 வாழை இனங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவற்றில் 11 விவசாயி இனங்களும், 8 புதிய இனங்களும் அடங்கும்.

இதனைத் தொடர்ந்து, தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தால் பன்முகத்தன்மை வாழை கண்காட்சி தொடங்கப்பட்டது.

இதில் 100-க்கும் மேற்பட்ட வாழை இனங்கள், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத் தப்பட்டன. Dr. T.மொஹபாத்ரா, தன் உரையில், இந்தியா ஆண்டுக்கு சுமார் 1 மில்லியன் டன் தோட்டக்கலைப் பொருட் களை ஏற்றுமதி செய்கிறது என்றும், மொத்த தோட்டக்கலை உற்பத்தி சுமார் 370 மில்லியன் டன் அளவை எட்டியுள்ளது என்றும், இது சுமார் 4% வளர்ச்சியை அடைந்துள்ளது. பயிர் மேம்பாட்டிற்கான பன்முகத் தன்மை பாதுகாப்பின் முக்கியத் துவத்தையும், விவசாயிகள் இந்த பாதுகாப்பிலும், இன மேம் பாட்டிலும் முக்கிய பங்கு வகிப்பதையும் வலியுறுத்தினார். மேலும், 2001 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட PPV&FRA சட்டம் விவசாயிகளின் ரகங்களும், அவர்களின் பங்களிப் பையும் அங்கீகரிப்பதாகும் என்று கூறினார்.

மேலும், தாவர மரபணு வளங்களை பாதுகாக்கும் விவசாயிகள் பாராட்டப்பட்டு, பரிசளிக்கப்பட்டும், அங்கீகரிக்கப் பட்டும் வருகிறார்கள் என்றும் தெரிவித்தார். குழுக்கள், சங்கங்கள் அல்லது கூட்டமைப்புகளுக்கு ரூ.10 லட்சம் வரை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. தனிப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.1 லட்ச ம்வரை வழங்கப்படுகிறது. பன்முகத் தன்மையை காக்கும் விவசாய்களின் முயற்சிக்கும் ரூபாய் 15 லட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. விவசாயத் துறையில் குறைந்து வரும் ஆர்வத்தால் மரபணு வளங்கள் பாதிக்கப்படுகின்றன என்றும், இதனை கருத்தில் கொண்டு இந்திய அரசு கத்தரி, வாழை மற்றும் மாதுளை போன்ற பயிர்களுக்கு மரபணு வங்கிகளை அமைப்பதை ஆதரிக்கிறது என்றும் கூறினார்.

Dr. D.K.அகர்வால், PPV&FRA சட்டம் கடந்த 25 ஆண்டு களாக செயல்பட்டு வருகிறது என்று தெரிவித்தார். இந்த சட்டம் புதிய இனங்களை மட்டுமன்றி, பாரம்பரிய விவசாயி இனங் களையும் பதிவு செய்ய உதவுகிறது என்றும், அவை எதிர் காலத்தில்இனப்பெருக்கம் மற்றும் விருத்திக்குப் பயன்படும் என்றும் கூறினார். இதுவரை 21,500 விண்ணப்பங்களில் இருந்து 10,500-க்கும் மேற்பட்ட இனங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதில் சுமார் 50% விவசாயிகளின் பயிர் இனங்கள் ஆகும். மேலும், சமீப ஆண்டுகளில் இந்தியா பாதுகாப்பு துறையில் முன்னேற்றம் கண்டுள்ளது என்றும், விவசாயி களுக்கு பதிவு கட்டணம் இலவசம் என்றும் தெரிவித்தார்.

Dr. V.B.பட்டேல், PPV&FRA சட்டத்தின் கீழ் இன உருவாக்குநர்களின் உரிமைகள் மற்றும் விவசாயிகளின் உரிமைகள் குறித்து விளக்கினார். குறிப்பாக நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களில் உற்பத்தி 14.8 மடங்கு வரை அதிகரித்துள்ளது என்று கூறினார்.

தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் இரா.செல்வராஜன் பேசுகையில், கருவாழை (கொல்லிமலை), ஜிங்கன் (நாகர் கோவில்) போன்ற 11 வாழை இனங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும், தேசிய வாழை ஆராய்ச்சி மையம் உருவாக்கிய இனங்களும் இதில் அடங்கும் என்றும் தெரிவித்தார். மேலும், வாழை பயிரில் PPV&FRA சட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.


PPV&FRA சட்ட ஆலோசகர் ராஜ்கணேஷ், விவசாயிகளுடன் நேரடியாக கலந்துரையாடி, இந்த சட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

இந்தியாவில் மட்டுமே புதிய இனங்களுடன் சேர்த்து விவசாயிகளின் பயிர் இனங்களையும் பதிவு செய்யும் வசதி உள்ளது என்றும், பதிவு கட்டணம் விவசாயிகளுக்கு இலவசம் என்றும் கூறினார். மேலும், விண்ணப்பங்களை எவ்வாறு நிரப்புவது என்பது குறித்து வழி காட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் சமநிலை உரப் பயன்பாடு விழிப்புணர்வு பற்றி பேசினார். இதன் மூலம் விளைச்சல் குறையாமல், உர பயன்பாட்டை 25% வரை குறைக்க முடியும் என்பது விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 120ம் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இறுதியாக முனைவர் M.S.சரஸ்வதி நன்றியுரை வழங்கினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தொட்டால் சிணுங்கி - அதிசய மூலிகை



தொட்டால் சிணுங்கி (TOUCH ME NOT PLANT) இதனுடைய அறிவியல் பெயர் (MUMOSA PUDIA) இது மருத்துவ குணமுள்ள ஒரு மூலிகை செடி. இதனுடைய சிறப்பு என்னென்றால் இதனுடைய இலைகளை தொட்டால் சுருங்கி கொள்ளும் தாவரம். குறைந்த பராமரிப்பில் வளரக்கூடியது.

**சாகுபடி முறை**

அனைத்து விதமான மண்ணிலும் வளரக்கூடிய தாவரம் என்றாலும் ஈரப்பதம் மிக்க செம்மண் அல்லது வண்டல் மண் சிறந்தது.

**விதைப்பு**

இதனுடைய விதைகள் மூலமாக வும் தண்டுகள் (றீவீசினி) முலமாகவும் இனப்பெருக்கம் செய்யலாம். கிராமங்களில் வரப்பு ஓரங்களிலும் அதிகமாக காணப்படும்.

**பாரமரிப்பு**

இந்த செடிக்கு தினந்தோறும் தண்ணீர் விட வேண்டும். தண்ணி வேர் பாகத்தில் தேங்க கூடாது.சூரிய ஒளி நன்றாக இந்த செடிகள் மீது பட வேண்டும் அவ்வாறாக இருந்தால் செடி நன்றாக வளரும் வாஸ்து சாஸ்திர படி இந்த செடியை வீட்டின் வடகிழக்கு திசையில் வைத்து வளர்ப்பது மங்கள கரமானது மற்றும் வீட்ல நேர்மறை ஆற்றலை அதிகரிக்குமென கருது கின்றனர்.

**தொட்டால் சிணுங்கியை தொட்டவுடன் இலை சுருங்குவது ஏன் தெரியுமா?**

இது இயற்கையின் அற்புதம். இலையை கையால் தொட்ட உடன் சுருங்கும் அற்புதம் அதனுடைய காம்பு செல்களில் நீர் வெளியேறுவதால் அழுத்தம் (TOGOR PRESSURE) ஏற்படுவதால் சுருங்கி விடும். இதை நாம் செய்து பார்த்தால் நம்முடைய மன அழுத்தம் (STRESS) குறையும்.

**தொட்டாற்சிணங்கியின் மருத்துவ பயன்கள்**

1) இதனுடைய இலை, வேர் நிழலில் காயவைத்து பொடி செய்து பாலில் கலந்து குடித்தால் சுகர் குறையும்.

2) சிறு நீரக கோளாறு - 10 கிராம் இலையை அரைத்து மோரில் கலந்து குடித்தால் சிறுநீரக கோளாறுகள் நீங்கும்.

3) வயிற்றுப்புண். குறையவும் இலைச்சாற்றை பருகலாம்.

4) ஆண்மைக் குறைபாடு சரி செய்யவும் பயன்படுத்தலாம்.

இது ஒரு NATURES WONDER யாகும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# மேற்கு ஆசியாவில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்த அமைச்சகங்களுக்கு இடையேயான விளக்கக் கூட்டம்

புது தில்லி, ஏப்.28

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் சூழ்நிலைக்கு மத்தியில், மத்திய அரசு தொடர்ச்சியான தகவல்கள் மூலம் குடிமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இது தொடர்பாக, திங்களன்று புதுதில்லி தேசிய ஊடக மையத்தில் ஒரு ஊடக சந்திப்பு நடைபெற்றது. இதில், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள், மற்றும் வெளியுறவு அமைச்சகங்களின் அதிகாரிகள் பங்கேற்று, எரிபொருள் இருப்பு, கடல்சார் செயல்பாடுகள், அப்பகுதியில் உள்ள இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்படும் உதவிகள், மற்றும் முக்கியத் துறைகளில் நிலைத்தன்மையைப் பாதுகாப்ப தற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை வழங்கினர்.

நாட்டில் உரங்களின் ஒட்டுமொத்த கையிருப்பு நிலை இன்று வரை 190.21 லட்சம் மெட்ரிக் டன்னாக, கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த 169.24 லட்சம் மெட்ரிக் டன்னைவிட அதிகமாக உள்ளது. மாநிலங்களில் விநியோக நிலை தொடர்ந்து வலுவாக உள்ளது. 2026 ஏப்ரல் 1 முதல் 26 வரையிலான காலகட்டத்திற்கு, தேவையை விட இருப்பு கணிசமாக உள்ளது. உலகளாவிய உர விலைகள் கடுமையாக உயர்ந்துள்ள போதிலும், ஒரு மூட்டை யூரியாவின் சர்வதேச விலை ரூ.4,000/-ஐத் தாண்டியுள்ள நிலையில், அரசு 45 கிலோ மூட்டை யூரியாவை விவசாயிகளுக்கு ரூ.266.5 என்ற அதிக மானிய விலையில் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்தியாவின் உரப் பாதுகாப்பு வலுவாகவும், நிலையானதாகவும் இருப்பதுடன், சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு, அனைத்து முக்கிய உரங்களின் இருப்பும் தொடர்ந்து தேவையை விட அதிகமாகவே இருக்கிறது.

எரிவாயுவைப் பொறுத்தவரை, வீட்டு உபயோக எல்பிஜி, வீட்டு உபயோக பிஎன்ஜி மற்றும் சிஎன்ஜி (போக்குவரத்து) ஆகியவை 100% விநியோகம் செய்யப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது.

வணிக எல்பிஜியைப் பொறுத்தவரை, மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உள்ளது. இது தவிர, மருந்து, எஃகு, வாகனம், விதை, விவசாயம் போன்ற துறைகளுக்கும் முன்னுரிமை அளிக்கப் பட்டுள்ளது. மேலும், 2026 மார்ச் 2 மற்றும் 3 ஆம் தேதிகளில் உள்ள சராசரி தினசரி விநியோகத்தின் அடிப்படையில், புலம் பெயர் தொழிலாளர்களுக்கான 5 கிலோ எஃப்டிஎல் விநியோகமும் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. 2026 ஏப்ரல் 1 முதல், சுமார் 19.5 லட்சம் 5 கிலோ எஃப்டிஎல் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.




எல்பிஜி பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தையைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் அமலாக்க நடவடிக்கைகள் தொடர்கின்றன. நாடு முழுவதும் நேற்று1800-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டன.

2026 ஏப்ரல் மாதத்தில் (26.04.26 வரை), மொத்தம் 1,65,627 மெட்ரிக் டன் (87.17 லட்சத்திற்கும் அதிகமான 19 கிலோ எல்பிஜி சிலிண்டர்களுக்குச் சமம்) வர்த்தக எல்பிஜி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் பொதுத் துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் சராசரி வாகன எல்பிஜி விற்பனை, 2026 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் இருந்த சராசரியான ஒரு நாளைக்கு சுமார் 177 மெட்ரிக் டன்னுடன் ஒப்பிடும்போது, ஒரு நாளைக்கு சுமார் 346 மெட்ரிக் டன்னாக உள்ளது. இது பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் வாகன எல்பிஜி விற்பனையில் சுமார் 95% அதிகரிப்பைக் காட்டுகிறது.

2026 ஏப்ரல் 25 அன்று, டோகோ நாட்டுக் கொடி தாங்கிய எம்டி சிரோன் 7 (ஐஎம்ஓ எண். 9127291) என்ற எண்ணெய்/ ரசாயனக் கப்பல் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. அக்கப்பலில் 17 இந்திய மாலுமிகள் (மொத்தம் 24 பணியாளர்கள்) இருந்தனர். இந்தச் சம்பவம் ஓமனின் ஷினாஸ் வெளித் துறைமுக எல்லையில் நிகழ்ந்தது. ஈரானிய கடலோரக் காவல்படையால் இடைமறிக்கப்பட்ட கப்பல்களுக்கு அருகில் அக்கப்பல் சென்று கொண்டிருந்த போது, எச்சரிக்கைக்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. எனினும் கப்பலில் இருந்த 17 இந்திய மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தில், செயல்பாட்டு மற்றும் பாதுகாப்பு அம்சங்களைக் கருத்தில் கொண்டு, ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே குறைந்த அளவிலான வணிக விமானங்களை விமான நிறுவனங்கள் தொடர்ந்து இயக்கி வருகின்றன. இன்று ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே சுமார் 105 விமானங்கள் இயக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சவுதி அரேபியா மற்றும் ஓமனில் உள்ள பல்வேறு விமான நிலையங்களிலிருந்து இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கு விமானங்கள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன.

கத்தார் வான்வெளி, பகுதியளவு திறக்கப்பட்டுள்ளதால், கத்தார் ஏர்வேஸ் இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கு விமானங்களை இயக்கி வருகிறது. ஏர் இந்தியா மற்றும் இண்டிகோ நிறுவனங்களும் விரைவில் கத்தாரிலிருந்து இந்தியாவிற்கு விமானச் சேவைகளை மீண்டும் தொடங்கத் திட்டமிட்டுள்ளன.

ஈராக் வான்வெளி திறக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள இடங்களுக்கு வரையறுக்கப்பட்ட விமானச் சேவைகள் இயக்கப்படுகின்றன. இவற்றை இந்தியாவிற்குப் பயன்படுத்தலாம். ஈரான் வான்வெளி, சரக்கு மற்றும் வாடகை விமானங்களுக்காகப் பகுதியளவு திறக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தியக் குடிமக்கள் ஈரானுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏற்கனவே அங்கு இருப்பவர்கள், இந்தியத் தூதரகத்தின் ஆதரவுடன் தரைவழி எல்லைப் பாதைகள் வழியாக வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது வரை, 2,461 இந்தியக் குடிமக்கள் தரைவழியாக ஈரானிலிருந்து வெளியேறுவதற்கு தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம், வழிவகுத்துள்ளது. இஸ்ரேல் வான்வெளியும் திறக்கப்பட்டு உள்ளது. இப்பகுதியில் உள்ள இடங்களுக்கு வரையறுக்கப்பட்ட விமானச் சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றை இந்தியாவிற்குப் பயன்படுத்தலாம்.

# விதை உறக்கமும் அதனை தடுக்கும் வழிமுறைகளும்

திண்டுக்கல், ஏப்.28

விதை உறக்கம் என்பது விதை முளைப்பதற்கு சாதகமான சூழ்நிலை இருந்தும் விதைகள் முளைத்தலில் தாமதம் ஏற்படுதல் ஆகும். பொதுவாக விதையின் ஓய்வு நிலையையே விதை உறக்கம் என்கிறோம்.

**விதை உறக்கம் பொதுவாக இரண்டு வகைப்படும்.**

1. முதல் நிலை விதை உறக்கம்
2. இரண்டாம் நிலை விதை உறக்கம்

**1. முதல் நிலை விதை உறக்கம்**

செடியில் விதை முதிர்ச்சி அடைவதற்கு முன்பே விதை உறக்கம் தூண்டப்படும் நிகழ்வே முதல் நிலை விதை உறக்கம் எனப்படும். இது பொதுவாக இரண்டு காரணிகளால் தூண்டப்படுகிறது.

### வெளிபுறக் காரணிகள்

இது விதையின் கடின உறை காரணமாக விதை உறக்கம் தூண்டப்படுதலை குறிக்கிறது. உதாரணமாக பயறு வகை பயிரான உளுந்தில் கடின விதை உறை காரணமாக நீர் உறிஞ்சுதல் தற்காலிகமாக தடுக்கப்பட்டு முளைப்புத்திறன் தாமதப்படுகிறது.

### உட்புறக் காரணிகள்

இது விதையின் கரு நன்கு முதிர்ச்சி அடையாத காரணத்தினாலோ அல்லது விதைகளில் வளர்ச்சிதை மாற்ற செயல்பாடு தடைபடுவதால் முளைப்புத்திறன் தாமதப்படுதலை குறிக்கிறது. பொதுவாக எத்திலின், அப்சிசிக் அமிலம் போன்றவை இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உதாரணமாக,

i. கொத்தமல்லி விதை உறையில் உள்ள கௌமாரின் அமிலம் மூலம் விதை உறக்கத்தை தூண்டுகிறது.

ii. சூரியகாந்தி விதை உறையில் உள்ள ஹைட்ரோசைனிக் அமிலம் மூலம் விதை உறக்கம் தூண்டப்படுகிறது.

iii. நெல் மற்றும் பருத்தி விதைகளில் அப்சிசிக் அமிலம் உருவாவதால் விதை உறக்கம் தூண்டப்படுகிறது.

### 2. இரண்டாம் நிலை விதை உறக்கம்

விதைகளுக்கு போதிய அளவு ஈரப்பதம், ஒளிச்செறிவு, வெப்ப நிலை மற்றும் ஆக்சிஜன் கிடைக்காத காரணங்களால் விதை உறக்கம் தூண்டப்படுவது இரண்டாம் நிலை விதை உறக்கம் எனப்படும்.

### விதை உறக்கத்தை தடுக்கும் வழிமுறைகள்

1. நன்கு முதிர்ச்சி பெற்ற விதைகளை விதைத்தலுக்கு பயன்படுத்த வேண்டும்.

2. அறுவடைக்கு பின்பு உடனடியாக விதைகளை பயன் படுத்தாமல் சிறிது காலம் சேமித்து வைத்து பின்பு பயன்படுத்துவதால் விதை உறக்கத்தை தடுத்து முளைப்புத்திறனை அதிகரிக்கலாம்.

3. பாகல் விதைகளில் கடினமான விதை உறையின் காரணமாக விதை உறக்கம் ஏற்படுகிறது. இதனை தடுக்க 2:1 என்ற விகிதத்தில் மணலுடன் விதையை சேர்த்து 5 முதல் 10 நிமிடங்கள்உரசுவதால் விதை உறைமென்மையாகி முளைப்புத்திறன் தூண்டப்படுகிறது. இம்முறை ஸ்கார்பிகேன் என்று அழைக்கப்படுகிறது.

4. பருத்தியில் விதை உறக்கத்தை தடுத்து முளைப்புத்திறனை தூண்டுவதற்கு எத்திரல் போன்ற வளர்ச்சி ஊக்கிகளை பயன் படுத்தலாம்.

5. பருவத்திற்கு ஏற்றாற் போல் பயிர்களை தேர்வு செய்து விதைக்கும் பொழுது விதை உறக்கம் களையப்பட்டு முளைப்புத்திறன் தூண்டப்படுகிறது.

எனவே, விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் முளைப்புத்திறனை அதிகரித்து அதிக மகசூல் ஈட்டலாம். விதையின் தரத்தை அறிந்து கொள்ள திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றிற்கு ரூ.80/- கட்டணாக செலுத்தி பரிசோதனை முடிவுகளை பெறலாம். இவ்வாறு விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாம தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளுக்கு கைகொடுக்கும் கத்தரிக்காய்

சிவகங்கை, ஏப்.28

சிவகங்கை மாவட்டத்தில் வெள்ளிகுறிச்சி, சொக்கநாதிருப்பு, அல்லிநகரம், கலியாந்தூர், பழையனூர் உள்ளிட்ட பகுதிகளில் கத்தரிக்காய் விவசாயம் கோடை காலத்தில் அதிக அளவில் செய்யப்படுகிறது. நெல் அறுவடை செய்த வயல்களில் உழவு செய்து கத்தரிக்காய், வெண்டைக்காய் உள்ளிட்டவற்றை விவசாயிகள் பயிரிடுவார்கள்.

கத்தரியில் கலர் கத்தரி, வெள்ளை கத்தரி, வரி கத்தரி என பல ரகங்கள் இருந்தாலும் மானாமதுரை மற்றும் திருபுவனம் வட்டாரத்தில் கலர் கத்தரி ரகமே அதிக அளவு பயிரிடப்படுகிறது. இவ்வட்டாரங்களில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கத்தரி செடி நடவு செய்யப்பட்ட 90வது நாளில் இருந்து நான்கு நாட்கள் இடைவெளியில் ஏழு மாதங்கள் வரை அறுவடை செய்யலாம். இந்த ரக கத்தரி வளர குறைந்த அளவே தண்ணீர் தேவை என்பதுடன், ஏக்கருக்கு 100 முதல் 150 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

மதுரை காய்கறி சந்தைகளில் கத்தரிகாய் தேவையை பூர்த்தி செய்வது மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் விளையும் கத்தரி காய்கள் தான்.

தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் நாய் தாக்கம் குறைந்து விளைச்சல் அதிகரித்து உள்ளது. ஏக்கருக்கு ரூ.40,000 செலவு செய்தால் ரூ.2 லட்சம் வரை வருமானம் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மனச்சோர்வை குறைத்து புத்துணர்ச்சி அளிக்கும் தோட்டக்கலைச் சிகிச்சை



தோட்டக்கலை ஒரு சிறந்த பொழுது போக்காகவும், இயற்கையுடன் இணைந்து மன அமைதியைத் தரும் செயல்பாடாகவும் உள்ளது. இன்றைய அதிவேக வாழ்க்கை முறையில் வேலைப்பளு, தூக்கமின்மை, நெரிசல் மிக்க பயணம், கடுமையான அலுவலக உழைப்பு, அதனால் ஏற்படும் மன உளைச்சல், உடல் சோர்வு போன்ற இன்னல்களால் சராசரி மனிதனின் இயல்பு வாழ்க்கை தொலைந்து போகிறது. மன அழுத்தம் காரணமாக தேவையில்லாத கோபம், கடுமையான வார்த்தைப் பிரயோகங்களையும் வெளிப்படுத்துகிறான். அதற்கு எளிய மற்றும் சிறப்பான தீர்வு தருகிறது, தோட்டக்கலைச் சிகிச்சை. தோட்டக்கலை சிகிச்சை என்பது தாவரங்களை வளர்த்து நடவு செய்தல், நீர் ஊற்றுதல், களை எடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் மூலம், ஒருவரின் உடல், மன, சமூக மற்றும் அறிவாற்றல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு தொழில்முறை சிகிச்சை முறையாகும். இது மன அழுத்தத்தைக் குறைத்து, சுயமரியாதையை அதிகரித்து, உடலை சுறுசுறுப்பாக வைத்து, மனநலம் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்த உதவுகிறது.

தோட்டக்கலையில் ஈடுபடுவது மன அழுத்தத்தை குறைக்கும். மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும். செடிகளை நடுவது, வளர்ப்பது, அறுவடை செய்வது போன்றவற்றில் ஈடுபடுவது, தியானம் செய்வதால் கிடைக்கும் நன்மையை பெற்றுத்தரும். பல்வேறு தாவரங்களுடன் ஈடுபடுவது மற்றும் தோட்டங்களில் நேரத்தை செலவிடுவது கவலையை குறைக்கிறது.



இயற்கையுடன் இருப்பது, தாவரங்களைப் பராமரிப்பது போன்ற முழு செயல்முறையும் இனிமையானது. தோட்டக்கலை செய்வது, அன்றாடப் பணிகளிலிருந்து ஒரு தனித்துவமான விடுதலையை அளித்து, மன அழுத்தத்தை அமைதியாக மாற்றுகிறது.

மண்ணைத் தோண்டுவது, செடிகளைப் பராமரிப்பது, அவை வளர்வதைப் பார்ப்பது போன்ற எளிய செயல்கள், ஆழ்ந்த அமைதியையும் நிறைவையும் அளிக்கக்கூடும். இந்த தோட்டக் கலை செயல்பாடு இயற்கையுடன் இணைய அனுமதிக்கிறது. அது அழகான மலர்களைப் பராமரிப்பதாக இருந்தாலும் சரி, காய்கறித் தோட்டம் அமைப்பதாக இருந்தாலும் சரி, இந்த நேரடி அனுபவம் அதை செய்பவர்களின் மனநிலையை மேம் படுத்துவது மட்டுமல்லாமல், பூமியுடனான ஆழமான பிணைப் பையும் ஆரோக்கியமான மனநிலையையும் வளர்க்கிறது.

பசுமையான நிலப்பரப்புகளும் பல்வேறு தாவரங்களும் தோட்டக்கலைக்கு ஒரு சிறந்த பின்னணியை வழங்கி, மன நலனை மேம்படுத்துகின்றன.

தோட்டங்களில் நேரம் செலவிடுவது மன அழுத்தம், பதட்டம் மற்றும் மனச்சோர்வைக் குறைக்கிறது . தோட்டக்கலையில் ஈடுபடும்போது, வெறும் விதைகளை மட்டும் நடுவதில்லை; ஒரு ஆரோக்கியமான மனநிலையையும் வளர்க்கப்படுகிறது. இயற்கையின் காட்சிகள், ஒலிகள் மற்றும் நறுமணங்கள் ஒரு அமைதியான சூழலை உருவாக்குகின்றன. அது அன்றாட வாழ்வின் பரபரப்பிலிருந்து ஒரு விடுதலையை அளித்து, ஆழ்ந்த தளர்வுக்கும் புத்துணர்ச்சிக்கும் வழிவகுக்கிறது.



செடிகளைப் பராமரிக்கும் செயல்முறை, ஒரு ஆழமான நோக்கத்தையும் உணர்வையும்

வழங்குகிறது. தோட்டம் செழித்து வளர்வதைப் பார்ப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இயற்கை உலகத்துடனான இந்தத் தொடர்பு மனநிலையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், சுற்றுச்சூழலின் மீது ஒரு ஆழமான ஈடுபாட்டையும் வளர்க்கிறது, மேலும் ஒரு பொறுப்புணர்வையும் கடமையுணர்வையும் ஊக்குவிக்கிறது.

தோட்டக்கலை மூலம் கிடைக்கும் இயற்கையின் குணப்படுத்தும் சக்தி, மனநிலையை மாற்றி, மிகவும் அமைதியான மற்றும் நிறைவான வாழ்விற்கு வழிவகுக்கும். தோட்டத்தைத் தோண்டி, செடிகளை நட்டு, பராமரிக்கும்போது, இயற்கையின் சக்தி இயல்பாகவே பணியில் கவனம் செலுத்த ஊக்குவிக்கிறது.





இந்த கவனமான ஈடுபாடு, அமைதி மற்றும் தெளிவு உணர்வை வளர்த்து, வேகமாக ஓடும் எண்ணங்களையும் கவலைகளையும் விட்டுவிட அனுமதிக்கிறது. தண்ணீர் பாய்ச்சுதல் அல்லது கத்தரித்தல் போன்ற தோட்டக்கலையின் திரும்பத் திரும்பச் செய்யப்படும் செயல்கள், மன அழுத்தம் கரைந்து போகும் ஒரு புகலிடத்தை உருவாக்கி, தியானம் போன்ற அனுபவத்தைத் தரக்கூடும். இந்த தோட்டக்கலை பயிற்சியை மேற்கொள்வது, வெறும் பொழுதுபோக்காக இல்லாமல், ஒட்டுமொத்த நல்வாழ்வையும் உணர்ச்சி ஆரோக்கி யத்தையும் மேம்படுத்துவதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாக உள்ளது.

**தோட்டக்கலை சிகிச்சையின் முக்கிய நன்மைகள்**

- **மன நலம் :** மன அழுத்தம் (ளீலிஷிமிஷ்விலியி), பதட்டம் மற்றும் மனச்சோர்வைக் குறைக்கிறது.
- **உடல் நலம் :** உடற்பயிற்சியாகச் செயல்பட்டு, கை-கண் ஒருங்கிணைப்பு மற்றும் தசை வலிமையை மேம்படுத்துகிறது.
- **அறிவாற்றல் :** திட்டமிடுதல், நினைவாற்றல் மற்றும் கவனம் செலுத்துதல் போன்ற திறன்களை மேம்படுத்துகிறது.
- **சமூக நலம் :** குழுவாகச் செயல்படுவதன் மூலம் சமூகத் தொடர்புகளை அதிகரிக்கிறது.
- **சுய மரியாதை :** செடிகள் வளர்வதைக் கண்டு சாதனை உணர்வை (Sense of accomplishment) ஏற்படுத்துகிறது.

இந்த சிகிச்சை மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், சிறைச்சாலைகள் மற்றும் மறுவாழ்வு மையங்களில் பயன் படுத்தப்படுகிறது. இது காயம் அடைந்தவர்கள், மனநலப் பாதிப்பு உள்ளவர்கள் மற்றும் முதியோர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தொகுப்பு : *கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். போன் : 82480 80922.*



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741